# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதி விசேஷமானது

අංක 2447/ 20 - 2025 ජූලි මස 29 වැනි අඟහරුවාදා - 2025.07.29

2447/20 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 29 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

39 (அ) (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை

2013, ஒற்றோபர் மாதம் 04 ஆம் திகதிய 1830/51 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் (அத்தியாயம் 460)காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழ் பிரசுரிக்கப்பட்ட 2013 ஆம் ஆண்டின் 299 ஆம் இலக்க கட்டளையில் குறிப்பிட்ட காணித் துண்டுகளினை முழுமையாக அரசுரித் தாக்கப்பட்டுள்ளதோடு, அரசின் சார்பில் அச் சட்டத்தின் 40 ஆம் பிரிவின் (அ) பந்தியின் கீழ் இக் காணித் துண்டுகளின் உடைமையும் பொறுப்பேற்கப்பட்டுள்ளன. எனினும் அச் சட்டத்தின் (1979 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட) 39 (அ) ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் குரகமகே தொன் லால் காந்த ஆகிய நான், குறித்த காணித் துண்டுகளில் கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித் துண்டினை இக் கட்டளை மூலம் உரித்து நீக்குகின்றேன்.

கே. டி. லால் காந்த
கமத்தொழில், கால்நடை வளங்கள்,
காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்.

எனது இல. : 4-3/10/2012/LRB/115
காணி எடுத்தல் உத்தியோகத்தர் இல.: WGSWD&EIP/ACQ/MH/O5.

கமத்தொழில், கால் நடை வளங்கள், காணி
மற்றும் நீர்ப்பாசன அமைச்சு,
"மிஹிகத்த மெதுர",
இல. 1200/6, காணிச் செயலகம்.
ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை.
2025, யூலை 24.

**அட்டவணை**

மேல் மாகாணம் கொழும்பு மாவட்டம், மஹரகம பிரதேச செயலாளர் பிரிவில், இல. 526/B, கங்கொடவில தெற்கு B கிராம அலுவலர் பிரிவில் கங்கொடவில (பிரிவு இல. 25- கங்கொடவில தெற்கு மஹரகம நகரசபை எல்லையினுள்) கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் 2025.04.08 ஆம் திகதி தயாரிக்கப்பட்ட வரைபட இல. CO/DSO/2015/13 இல் விபரமாக குறிப்பிடப்பட்ட பின்வரும் பெயர்கள், விஸ்தீரணங்களைக் கொண்ட காணித்துண்டு களின் எல்லைகள்:

**01. துண்டு 'D' – வெதவசம் கொலயென்கும்புர, மதட்டிய கஹகும்புர மற்றும் கந்துருகஹ கும்புர மற்றும் ஓவிட்ட - விஸ்தீரணம் : 0.0020 ஹெக்டயார்**

வடக்கு : ஆ.வ.கொ. 9583 இல் துண்டு இல. 43 மற்றும் நுழைவு வீதி; கிழக்கு : ஆ. வ. கொ. 9583 இல் துண்டு இல. 43, நுழைவு வீதி மற்றும் இந்த வரைபடத்தில் துண்டு E; தெற்கு : துண்டு E; மேற்கு : துண்டு E.

**02. துண்டு 'E' – வெதவசம் கொலயென்கும்புர, மதட்டிய கஹகும்புர மற்றும் கந்துருகஹ கும்புர மற்றும் ஓவிட்ட - விஸ்தீரணம் : 0.0627 ஹெக்டயார்**

வடக்கு : துண்டு C, ஆ.வ.கொ. 9583 இல் துண்டு இல. 43, இந்த வரைபடத்தில் துண்டு D நுழைவு வீதி மற்றும் எச். எல். ஏ. பெரேரா உரிமைகோரும் வனாத வீதியின் வரிமதிப்பீட்டு இல. 59/8 B ஐ கொண்ட காணி; கிழக்கு : ஆ. வ. கொ. 9583 இல் துண்டு இல. 43, இந்த வரைபடத்தில் துண்டு D, நுழைவு வீதி, எச். எல். ஏ. பெரேரா உரிமைகோரும் வனாத வீதியின் வரிமதிப்பீட்டு இல. 59/8 B ஐ கொண்ட காணி, ஆ.வ.கொ. 9583 இல் துண்டு இல. 50 மற்றும் 49; தெற்கு : ஆ. வ. கொ. 9583 இல் துண்டு இல. 49, இந்த வரைபடத்தில் துண்டு B; மேற்கு : துண்டு B, A, ஆ. வ. கொ. 9583 இல் துண்டு இல. 42 இந்த வரைபடத்தில் துண்டு C, ஆ. வ. கொ. 9583 இல் துண்டு இல. 43, இந்த வரைபடத்தில் துண்டு D மற்றும் நுழைவு வீதி.

EOG 07 - 0347

---

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

39 (1) ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்தல்

காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளையில் விபரிக்கப்பட்ட 2013.10.04 ஆம் திகதிய 1830/51 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2013 ஆம் ஆண்டின் 299 ஆம் இலக்க 2013.09.30 ஆம் திகதிய கட்டளைச் சட்டத்தில் விபரிக்கப்பட்ட காணித் துண்டு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. கீழே விபரிக்கப்பட்ட காணித் துண்டின் இருப்பாட்சி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சார்பில் இன்னும் பொறுப்பேற்கப்படவில்லை ஆகையால், கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் குரகமகே தொன் லால் காந்த ஆகிய நான், காணி எடுத்தற் சட்டத்தின் 39(1) ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் 2013.10.04 ஆம் திகதிய 1830/51 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2013 ஆம் ஆண்டின் 299 ஆம் இலக்க 2013.09.30 ஆம் திகதிய இக் கட்டளையை இத்தால் இரத்துச் செய்கிறேன்.

கே. டி. லால் காந்த
கமத்தொழில், கால்நடை வளங்கள்,
காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்.

எனது இல. : 4 - 3/10/2012/LRB/115.
பிரதேச செயலாளர் இல. : WGSWD&EIP/ ACQ/MH/05.
கமத்தொழில், கால் நடை வளங்கள், காணி மற்றும்
நீர்ப்பாசன அமைச்சு,
''மிஹிகத்த மெதுர '',
இல. 1200/6, காணிச் செயலகம்.
ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை.
2025, யூலை 24.

**அட்டவணை**

மேல் மாகாணம் கொழும்பு மாவட்டம், மஹரகம பிரதேச செயலாளர் பிரிவில், இல. 526B, கங்கொடவில தெற்கு B கிராம அலுவலர் பிரிவில் கங்கொடவில (பிரிவு இல. 25 கங்கொடவில தெற்கு, மஹரகம நகரசபை எல்லையினுள்) கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் 2025.04.08 ஆம் திகதி தயாரிக்கப்பட்ட வரைபட இல. CO/DSO/2025/12 இல் விபரிக்கப்பட்ட பின்வரும் காணித் துண்டின் எல்லைகள் :

**01. துண்டு 'A' – அம்பகஹகும்புர மற்றும் இஹல வெலேகும்புர - விஸ்தீரணம் : 0.0845 ஹெக்டயார்**

வடக்கு : எஸ்.எஸ்.ஏ. திலகசிறி உரிமைகோரும் ரபர்வத்தை வீதியின் வரிமதிப்பீட்டு இலக்கம் கண்டுபிடிக்க முடியாத காணி மற்றும் துண்டு B; கிழக்கு : துண்டு B, ஆ.வ .கொ. 9583 இல் துண்டு இல. 40 மற்றும் கலுஆரச்சிகே கமலாவதி உரிமைகோரும் ரபர்வத்தை வீதியின் வரி மதிப்பீட்டு இலக்கம் 85 ஐக் கொண்ட காணி; தெற்கு : கலுஆரச்சிகே கமலாவதி உரிமைகோரும் ரபர்வத்தை வீதியின் வரிமதிப்பீட்டு இலக்கம் 85 ஐக் கொண்ட காணி மற்றும் ரபர்வத்தை வீதி; மேற்கு : ரபர்வத்தை வீதி மற்றும் எஸ்.எஸ்.ஏ. திலகசிறி உரிமைகோரும் ரபர்வத்தை வீதியின் வரிமதிப்பீட்டு இலக்கம் கண்டுபிடிக்கமுடியாத காணி.

EOG 07 - 0348

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.